திரு. த. சோனையா : தலைவரவர்களே, மானாமதுரை வைகையின் குறுக்கே இருக்கும் பாலம் இராஜராஜேஸ்வர சேதுபதி பாலம் என்று அந்தக் காலத்தில் கட்டப்பட்ட பாலம். அது பழுதடைந்திருப்பதால் வண்டி வாகனங்கள் செல்லும்பொழுது ஓட்டுநர்கள் கூட அஞ்சுகிறார்கள். அடிக்கடி வைகையிலே இறக்கிச் செல்கிறார்கள். எனவே அதைப் பழுதுபார்க்க வேண்டும் அல்லது வேறொரு பாலம் கட்ட திட்டமிடப்பட வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அதற்குப் பதில் புதிய பாலம் கட்டத்தான் 35 இலட்சம் ரூபாயில் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன்.

திருவள்ளூர் வட்டத்தில் புதிய பாலங்கள்.

*138 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், மாகரல் கண்டிகை, தாராட்சி ஆகிய இரு கிராமங்களிலும் மேற்புறங்களில் செல்லும் பொதுப் பணித் துறைக் கால்வாய்களின் மேல், மறுபுறம் செல்ல அமைக்கப்படும் பாலங்கள் எப்போது முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : திருவள்ளூர் வட்டம் மாகரல் கண்டிகை கிராமத்தின் அருகில் சோழவரம் வரத்துக் கால்வாயின் குறுக்கே ரூ. 60,000 மதிப்பீட்டுச் செலவில் பாலம் அமைக்கும் திட்டம் அரசு ஆணை எண். 3403, பொதுப் பணித் துறை, நாள் 20—11—1973, அரசு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர் வட்டம் தாராட்சி கிராமத்தின் அருகே ரூ. 27,700 மதிப்பீட்டுச் செலவில் பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கின்றது, விரைவில் ஆணை பிறப்பிக்கப் படும்.

1974 சனவரி 24]

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, இந்த இரண்டு பாலங்களுக்கும் அரசு அனுமதி அளித்திருப்பதற்காக நன்றி தெரிவித்துக்கொள்ளும் அதேநேரத்தில், அங்குள்ளவர்கள் மறு புறம் செல்வதற்கு முடியாமல் இருப்பதால் இந்த ஆண்டே துவக்கப்பட்டு குறிப்பிட்ட காலத்தில் முடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஒரு பாலத்திற்கு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இன்னொரு பாலத்திற்கு அரசின் பரிசீலனை முடிந்தபிறகு ஆணை பிறப்பிக்கப் படும்.

ஜெயமங்கலம், மேல்மங்கலம் சாலையிலுள்ள பாலத்தை அகலப்படுத்தல்.

*139 வின—**திரு. நா. வெ. குருசாமி:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், ஜெயமங்கலத்துக்கும், மேல்மங்கலத் துக்கும் இடையில் உள்ள திருப்பத்தில் உள்ள பாலத்தை விரிவு படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.

கள்ளு, சாராயக் கடைகளின் ஏலத்தொகை.

*52 வின—**திரு. கே. எம். சுப்பிரமணியம்:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடப்பு ஆண்டில், சாராயக் கடைகள் ஏலம் விடப் பட்டதன் மூலம், ஜூலை 30-ஆம் நாள் முடிய கிடைத்தத் தொகை எவ்வளவு?

(இ) சென்ற ஆண்டு, அதாவது செப்டம்பர் 30-ஆம் நாள் வரையிலான ஆண்டிற்கு, சாராயக் கடைகள், கள்ளுக் கடைகள் ஏலம் விடப்பட்டதன் மூலம் கிடைத்த மொத்தத் தொகை எவ்வளவு?